## சுருக்கம்

**தமிழ் வளர்ச்சி – நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் கட்டட வளாக விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணி – கூடுதல் நிதியுதவி – ரூ.25,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.29 நாள் 18.02.2021

சார்வரி, மாசி – 6

திருவள்ளுவராண்டு 2052

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.95, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.1)த் துறை. நாள் 30.08.2019.

**படிக்க:**

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.6652/வசெ3/2019, நாள் 28.12.2020.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் கட்டட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் அவர்கள் நவிமும்பை கட்டட விரிவாக்கத்திற்கான பூமி பூசை 15.12.2019 அன்று நடைபெற்றதாகவும், கட்டட வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேலையில் மார்ச் மாத இறுதியில் கொரோனா தொற்றுநோய் காரணமாக போக்குவரத்து மற்றும் வேலையாட்கள் தட்டுப்பாடு போன்ற பிரச்சனைகளால் கட்டுமானப் பணி பாதிக்கப்பட்டது என்றும், ஊரடங்கு தளர்விற்கு பின் 50% கட்டுமானப் பணி நிறைவடைந்துள்ளது என்றும், ஒப்பந்தப் புள்ளியின்படி நவிமும்பை தமிழ்ச் சங்கம் கட்டுமான நிறுவனத்திற்கு மொத்தம் ரூ. 1,60,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) மற்றும் ஜி.எஸ்.டி வழங்கப்பட வேண்டும் என்றும், கூடுதல் பணிகள் செய்ய நேர்ந்தால் அவற்றுக்கு கூடுதல் தொகை

கொடுக்க நேரிடும் என்றும், இவற்றுடன் சங்கத்திற்கு தேவையான பிற வசதிகளுக்கும் செலவு செய்ய வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

3) மேலும், கூடுதல் மாற்றத்துடனான கட்டட விரிவாக்கப் பணிகளுக்காகும் மதிப்பீடு ரூ.3,00,87,301/-க்கு (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து ஏழாயிரத்து முன்னூற்று ஒன்று மட்டும்) கட்டுமான ஒப்பந்த நிறுவனத்தால் அளிக்கப்பட்ட மதிப்பீட்டை இணைத்து இதுவரை ரூ.1.12 கோடி செலவிடப்பட்டதாகவும் வங்கிக் கணக்கில் வைப்புத் தொகையாகவும் சேமிப்புத் தொகையாகவும் சுமார் ரூ.80.00 இலட்சம் இருப்பதாகவும், மேலும் பொது மக்களிடம் நன்கொடைகள் பெற முயற்சி செய்து வருவதாகவும் ஊரடங்கினால் வணிக நிறுவனங்கள் பொருளாதார பாதிப்பு அடைந்துள்ளதால், கட்டட விரிவாக்கத்திற்கு நன்கொடை திரட்டும் முயற்சி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இத்தகைய சூழலினால், கூடுதல் நிதியுதவிக்கு மீண்டும் தமிழக அரசை நாட வேண்டிய கட்டாயம் சங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

4) மேலும், கட்டடப் பணிகளை முடித்துப் பயன்பாட்டிற்கு கொண்டுவர தமிழக அரசு ரூ.80.00 இலட்சம் நிதியுதவியைத் தற்போது வழங்கி உதவினால் மட்டுமே நவிமும்பை தமிழ்ச் சங்க கட்டட வளாக விரிவாக்கத்தைத் திட்டமிட்டபடி நிறைவு செய்ய இயலும் எனவும் இந்த கட்டடப்பணி நிறைவு பெற கூடுதல் நிதி உதவியாக ரூ.80.00 இலட்சம் வழங்கி உதவுமாறு வேண்டியுள்ளார் என்றும், புலம்பெயர்ந்த தமிழர்களின் தமிழ்ப்பணியினை ஊக்குவித்து நவிமும்பை தமிழ்ச்சங்க கட்டட விரிவாக்கத்திற்கு கூடுதல் நிதியுதவியாக ரூ.80.00 இலட்சம் அரசு நிலையில் கருதிப்பார்த்து வழங்கப்பெறலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

5) அரசின் மிக கவனமான பரிசீலினைக்குபின் நவிமும்பைத் தமிழ்ச் சங்கத் தலைவரின் கோரிக்கையினை, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்று, நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் கட்டட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு தமிழக அரசின் சார்பில் கூடுதல் நிதியுதவியாக ரூ.25,00,000/-த்தை (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) சிறப்பு நிகழ்வாக பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

i) மேற்படி தொகையை தமிழ் வளர்ச்சி இயக்குநர் பெற்று நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் அறங்காவலர் குழுத் தலைவருக்கு வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

ii) ஒப்பளிப்பு செய்யப்படும் கூடுதல் தொகை கட்டட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும்.

iii) ஒப்பளிப்பு செய்யப்படும் தொகைக்குரிய பயனீட்டுச் சான்றிதழ் பட்டயக் கணக்கரால் தணிக்கை செய்யப்பட்ட செலவின அறிக்கை ஆகியவற்றை தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

iv) செலவினம் தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநர் வேண்டும் ஆவணங்களையும் விவரங்களையும் உடனுக்குடன் அளிக்க வேண்டும்.

v) நிபந்தனைகள் நிறைவேற்றப்படாத நிலை அல்லது மீறப்பட்ட நிலை இருப்பின் பெறப்பட்ட நிதியுதவித் தொகையை முழுமையாக அரசு அறுதியிடும் வட்டித் தொகையுடன் ஒட்டுமொத்தமாகத் திரும்பச் செலுத்தப்படவேண்டும்.

vi) கட்டடம் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆய்வு செய்ய விரும்பும் நேர்வில் ஆய்வுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

vii) கட்டப்பெறும் கட்டடம் உரியவாறு மும்பை பெருநகர குழுமம் அனுமதி பெற்று கட்டப்பெற வேண்டும். அனுமதி பெறப்பட்ட கட்டட வரைபடம் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பப்பெற வேண்டும் எனவும் நவிமும்பை தமிழ் சங்கத்திற்கு அறிவுறுத்தப்படுகிறது.

viii) வழங்கப்பெறும் மானியத்தைப் பயன்படுத்தியபின், கட்டடம் கட்டி முடிக்கப்பெற்றதற்கான சான்றினை அரசு பொதுப் பணித்துறை / மும்பை பெருநகர குழுமம் பெற்றுத் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும் அரசுக்கும் அனுப்பவேண்டும்.

6) மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202 – பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை."

IFHRMS (த.தொ.கு. 2202 05 800 AK 30903)
OLD (த.தொ.கு. 2202 05 800 AK 0930)

7) மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/- 2020-2021-ஆம் நிதியாண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் இருப்பினும், மேற்கண்ட செலவினம் 2020-2021-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கபடுகிறது. மேலும், மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020-2021-ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில்/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(தவ(ம)செ/வ.செ.பொ.1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.6525/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 18.02.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1797 (ஓர் ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஏழு) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்:</u>

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
தலைவர், நவிமும்பை தமிழ்ச் சங்கம்
பிளாட் 2/சி -1, 9ஏ, வாசி, நவிமும்பை-400 703.
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600 008.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

<u>நகல்:</u>

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி(வ.செ.பொ I/வ.செ.பொ.II/வ.வ.I/த.வ.(ம)செ)த்துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

க.துர்கை 19/2/21
பிரிவு அலுவலர்

19/2/2021